# 6. முல்லை நில மக்களின் தொழில்கள்



**தி. அனுராதா**
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
அக்சிலியம் கல்லூரி, காட்பாடி, வேலூர்-6.
Em ail:anu896448 gm ail.com

## முன்னுரை

சங்க இலக்கியம் என்பது எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் உள்ளடக்கியது. இதில் அகம், புறம், அகம்புறம் என பகுத்துள்ளனர். மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு அடிப்படையாக அமைவது தொழிலாகும். மக்கள் தாங்கள் வாழும் நிலத்தின் அடிப்படையில் தொழில் செய்வதைக் காணலாம். மலையும் மலை சார்ந்த நிலத்தைக் குறிஞ்சி என்பர். காடும் காடு சார்ந்த நிலத்தை முல்லை என்பர். வயலும் வயல் சார்ந்த நிலத்தை மருதம் என்பர். கடலும் கடல் சார்ந்த நிலத்தை நெய்தல் என்பர். சங்க இலக்கியத்தில் முல்லை நிலத்தொழில்கள் பற்றிய கருத்துகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தொல்காப்பியத்தில் தொழில்

"ஆயர் வேட்டுவர் ஆடுஉத்திணைப்பெயர்
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே"

(தொல்,அகம்:பா:23)

என்ற அடிகள் வழியாக முல்லை நிலத்தில் ஆண்களை உணர்த்தும் திணைப் பெயர் ஆயர் எனவும், வேட்டுவர் எனவும் தொல்காப்பியர் கூறுகின்றார்.

**ஆநிரை மேய்த்தல்**

ஆடு மாடுகளை மேய்க்கும் தொழில் முல்லை நிலத்தவரின் தலையாய தொழிலாகும். முல்லை நிலக் கடவுள் திருமால் என்பர். இடையர்கள் ஆடுகளையும், மாடுகளையும் மேய்த்து அதிலிருந்து வரும் பொருள்களையே வருமானமாகக் கொண்டனர்.

"பறியுடைக் கையர் மறியினத்து ஒழிய
பாலோடு வந்த கூழொடு பெயரும்
ஆடுடை இடைமகன் சென்னிச்
சூடிய எல்லாம் சிறுபசு முகையே" (குறு:221:2-5)

இவ்வடிகள் வாயிலாக ஆடுகளையே தமக்கு செல்வமாகக் கொண்ட இடைக்குடியில் பிறந்த மகன் மாலைப்பொழுதில் கையில் எடுத்துச் சென்ற பனை ஓலையால் ஆன பறி ஓலையை விரித்துப் படுத்துறங்குவான். காலையில் எழுந்து பாலைக் கரந்து ஊர்ப்பகுதியில் உள்ள வீடுகளுக்குச் சென்று கொடுப்பான். பிறகு அவர்கள் கொடுக்கும் உணவினை வீட்டுக்கு கொண்டுவந்து கொடுப்பான்.

"படுமணி மிடற்ற பயநிரை ஆயம்
கொடு மடி உடையர் கோற் முகைக் கோவலர்
கொன்றை அம்குழலர் பின்றைத் தூங்க"
(அகம்,54:9-11)

அதாவது மாலை நேரங்களில் மெதுவான நடையை உடைய இளங்கன்றுகள் கயிறுகளால் கட்டப்பட்டிருக்கும். அக்கன்றுகள் பெருத்த பால் மடிகள் சுருங்குவதை விரும்பினவாய் குரலை எழுப்பியவாறு ஒலிக்கும். அதனைக் கண்ட கோவலர் அக்கன்றுகளை அவிழ்த்து விட, ஒலிக்கும் மணிகள் உடைய கழுத்தினைக் கொண்ட பசுக்கூட்டங்கள் வீடுகள் நோக்கிச் செல்லும் கோவலர்கள் கையிலே கோலை வைத்துக் கொண்டு பின்னே நடந்து வருவார்.

பல் ஆ தந்த கல்லாக் கோவலர்
கொன்றை அம்தீம் குழல் மன்றுதோறு இயம்ப
(நற், 364:9-10)

ஆடுமாடுகளை மேய்த்து வந்த ஆயர்கள் மேய்த்தல் தொழில், தவிர பிறிதொன்றும் அறியாதவர்கள். புல்லாங்குழல் இசைத்தபடி ஆடுமாடுகளை மேய்த்தனர். புல்லிய மயிரைக் கொண்ட மணிகள் கட்டப்பட்ட ஆடுகளின் கூட்டம் மாலை நேரம் வந்ததை அறிந்து மேய்வதை நிறுத்தி விட்டு தொழுவத்தைச் சேரும் என்பதை,

**நுண்பல் துவலை ஒரு திறம் நனைப்ப**
**தண்டுகால் ஊன்றிய தனிநிலை இடையன்**
**(அகம், 274:7-8)**

கார்காலத்து நள்ளிரவில் தாம்புக் கயிற்றினைக் கொண்ட உறியினையும், பானையையும் கொண்டுக் கோலினைத் தன் காலுடன் சேர்த்துத் தனியே நிற்கும் இடையன் செம்மறி ஆட்டின் காவலுக்கு நிற்கிறான். தீக்கடைக் கோலினால் தீ ஏற்படுத்தி வாயை மடித்துச் சீழ்க்கை ஒலியை எழுப்புகின்றான். அவ்வொலிக்குப் பயந்து ஆட்டுக்குட்டியைப் பிடிக்க வந்த குள்ள நரி ஓடியது. ஆடுகளை மேய்க்கும் இடையன் முல்லை மலரைப் பறித்து மாலையாகச் சூடிக்கொள்வான் என்பதை,

**கொல்லைக் கோவலர் குறும்புனம் சேர்த்த**
**குறுங் காற் குரவின் குவி இணர் வான்பபூ**
**ஆடுடை இடைமகன் சூடப் பூக்கும் (நற், 266:1-3)**

முல்லை நிலத்தில் ஆடுகளை மேய்க்கும் இடையன் ஆடுகள் ஒன்று சேர்ந்து கூட்டமாக கூடுவதற்கு வேற்று இடம் நோக்கிச் செல்லாமல் இருப்பதற்கு நாவை மடித்தபடி வீளை ஒலியை எழுப்புவான். இரவில் உறங்கும் தன் படுக்கையை பனை ஓலைப் பாயொடு ஆட்டுக்கிடை அருகிலே கட்டிலில் உறங்குவான். இடையன் பால் கரந்து ஊர் மக்களிடத்தில் விலைக் கூறி விற்று வருவான்,

**பறித் புறத்த இட்ட பால் நொடை இடையன்**
**(நற்,142:4)**

பால் மோர் விற்றல் (பண்ட மாற்றுதல்) ஆயர்குலப்பெண்கள் அந்தி காலைப் பொழுதிலே பறவை எழும் முன்பே துயில்

எழுபவர்கள். மோர்கடைந்து அருகில் உள்ள ஊரில் சென்று விற்கக் கூடியவள். அதற்கு இணையான உணவுகளைப் பெற்று வருவாள். ஆயர்குலப் பெண்கள் தான் பெற்ற பணத்திற்கு ஈடாகப் பசுக்களை வாங்கி வளர்ப்பார்கள். தங்கம் கொடுத்தாலும் பெற்றுக் கொள்ள மாட்டார்கள்.

பாலொடு வந்த கூழொடு பெரும்
ஆடுடை இடைமான் சென்னி (குறு,221:3-4)

## ஆயர்கள் உழவு

முல்லை நிலத்தில் பெரும் மழை பொழிந்தது. இடைவிடாது பெய்த மழையால் முல்லை அழகுறக் காட்சியளித்தது என்பதனை,

**வானம்பாடி வறம் களைந்து ஆனாது**
**அழிதுளி தலைஇய புறவில் காண்வர (ஐங்,496:1-2)**

என ஐங்குறுநூறு ஆசிரியர் சுட்டுகின்றார். மேலும் முல்லை நிலத்தில் பறவையினமும் விலங்கினமும் தத்தம் துணையோடு கூடி மகிழ்ந்து துள்ளித் திரியவும், கிளைகளிலும் கொடிகளிலும் பலவகையான பழவகைகள் நிறைந்து தோன்றவும் அவற்றால் வளமுற்று மணம் நாறும் காடு என ஐங்குறுநூறில் *(414)* புலப்படுத்துவதை அறியலாம். இவ்வாறு மழையானது இடைவிடாது பெய்தமையால் இடையர்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்தனர். அதனால் தங்களுடைய காட்டை உழுதனர் என்பதனை,

பழமழைக் கலித்த புதுப்புன வரகின்
இரலை மேய்ந்த குறைத்தலைப் பாவை (குறு:220:1-2)

என்று இடம் பெறும் அடிகளில் உழுத புன்செய் நிலத்தில் வரகுப் பயிரை விதைத்ததையும், விதைக்கப்பட்ட வரகானது, நன்கு வளர்ந்து வந்ததையும் அறுவடை செய்யப்பட்ட கதிர்களின் இளந்தளிர்களை மான்கள் உண்ணுவதையும் காண முடிகிறது. முல்லை நில மக்கள் தரிசாகக் கிடக்கும் நிலத்தை உழுது அவற்றில் புதுப்பயிர் செய்து மாலையில் வீடு திரும்பினார்கள். ஒரே நிலத்தில் ஆயர்கள் பலமுறை வரகு விதைத்தனர். பலமுறையும் வரகு முதிர்ந்த நிலையிலேயே காணப்பட்டது.

## பூவிற்றல் தொழில்

முல்லை நிலத்தில் வசிக்கும் உழவர் குலப்பெண் பசிய, குருக்கத்தி மலருடன் சிறுசண்பக மலரையும் வாங்கிக் கொள்வீராக என கடகப் பெட்டியைக் கைகளிலேயே வைத்துக்கொண்டு பூவிற்கும் உழவரின் இள்மகள்.

## தச்சனின் தொழில்

மரத்தை அறுத்து அதன் மூலம் பொருள்களைச் செய்வோர் தச்சர் எனப்பட்டனர்.. தச்சன் செய்த சிறிய தேரினைக் குதிரைகள் பூட்டியபடி சிறுவர்கள் அத்தேரினை இழுத்து விளையாடுவார்கள்

**தச்சன் செய்த சிறுமா வையம்**
**எண்தேர் செய்யும் தச்சன்** (புறம், 87:2-4)

## கிணறு தோண்டுதல்

செம்மண் பரந்த நிலமான முல்லை நிலத்தில் கிணறு தோண்டுதல் அக்கிணற்றில் உள்ள தண்ணீரை எறபெட்டிபோட்டு இரைத்து ஆடு, மாடு தண்ணீர்க் குடிக்கப் பயன்படுத்துவார்கள். அத்தண்ணீரைக் கொண்டு உழவுத் தொழில் செய்வார்கள் ஆயர்கள்.

## கூடை முறம் முடைத்தல்

கோரை, பனை ஓலை, நார், மூங்கில், கிடைச்சு முதலியவற்றால் கூடை, முறம், வட்டி போன்ற பொருள்களைச் செய்தனர்.. இத்தொழில் செய்வோர் மிகவும் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்கள் என்பர்.

## நெல்வகைகள்

ஐவன நெல், மூங்கில் நெல் குறிஞ்சி, முல்லை நிலங்களிலும், செந்நெல் மருத நிலங்களிலும் விளைவித்தனர்.

**ஆடுகழை நெல்லை அரையுரலுட் பெய்திருவாம்**
(கலி:41)

என்னும் வரி குறிஞ்சி நிலத்தில் மூங்கில் நெல் விளைந்ததைக் குறிக்கிறது. மருதநில வயலிடத்து செந்நெல் விளைந்ததினை,

**புள்ளிமிழ் அகல்வயல் ஒளி செந்நெல் இடை பூத்த**
**(கலி:79)**

என்னும் வரி விளக்குகிறது.

## எருவிடுதல்

விளை நிலங்களில் நல்ல உரமிட்டால் நல்ல விளைச்சலை பெறலாம் என்று உழவர்கள் அறிந்திருந்தனர். கால்நடைகளின் சாணத்திணையும், இலை தழைகளையும் எருவாகப் பயன்படுத்தினர். கால் நடைகளின் சாணத்திணை தாதெரு எனக் குறித்தனர். எருக்களைக் கொட்டி வைப்பதற்கு தனி ஓர் இடம் உண்டு. அவ்விடத்தில் எருக்களைக் கொட்டி சேமித்து வைத்தனர். அவ்விடத்திற்கு தாதெரு மன்றம்; *(கலி:108)* எனக் குறிப்பிட்டனர்.

## நெசவுத் தொழில்

உணவினை அடுத்து இன்றியமையாத் தேவையாக வேண்டப் படுவது ஆடை ஆகும். விலங்குகளைப் போலல்லாமல் உடலை மறைத்தற்குரிய உடையினை அணிந்து மானத்துடன் வாழும் முறையினை மக்கள் அறிந்திருந்தனர். நாகரிகம் வளராத பழங் காலத்திலே மக்கள் தழை, இலை ஆடைகளையும், மரப்பட்டை, விலங்குகளின் தோலினையும் உடுத்து வாழ்ந்தனர். அந்நிலை மாறி தம் அறிவுத் திறத்தால் பருத்தியின் பஞ்சினை நூலாக நூற்று ஆடையாக நெய்து அணிந்தனர். ஆடையை நெய்யும் தொழிலை நெசவுத் தொழில் என்கிறோம். நெசவுத் தொழிலுக்கு இன்றியமையாக் காரணமாக அமைவது பருத்தி. பருத்தி தொன்று தொட்டுத் தமிழகத்தில் விளைந்து வருகின்றது. பருத்தி விளைச்சல் மிகுதியாக உடைய ஊரை பருத்தி வேலிச் சீறூர் என்று புறநானூறு குறிப்பிடுகிறது. மகளிர் பருத்திப் பஞ்சினை செப்பம் செய்து நூலாக நூற்கும் திறன் பெற்று விளங்கினர். மூதாட்டியரும் கைம்பெண்டிரும் நூல் நூற்றனர். அதனால் அவர் பருத்திப் பெண்டிர் எனப்பட்டனர் எனக் குறிப்பிடுகிறார் தேவநேயப்பாவணார்.. இக்கருத்தினை,

பருத்திப் பெண்டிர் பதுவலன்ன
ஆளில பெண்டிர் தானிற்செய்த
நுணங்கு நுண்பனுவல் (நற்:353)

என்னும் வரிகள் புலப்படுத்துகின்றன. ஆடையை, உடை, துகில், கலிங்கம் என்றும் குறிப்பிடுகின்றனர். ஆடை நெய்வதில் நம் நாட்டவர் சிறந்து விளங்கினர். ஆடைகள் சாயம் தோய்த்தும் கலை நயத்துடனும் நெய்யப்பட்டன. ஆடைகளில் பூவேலைப்பாடு காணப்பட்டதினை,

பல்கலைச் சில்ழங் கலிங்கத்துள் (கலி:56)

என்னும் வரியும்

தைஇய பூந்துகில் ஐதுகழல் ஓடுதிரை (கலி:85)

என்னும் வரியும் குறிப்பிடுகிறது. ஆடைகளுக்குத் தருநிற வண்ணமும் நீலநிற வண்ணமும் தோய்க்கப்பட்டது. கருநிற வண்ணமும் தோய்த்த ஆடை கருத்துவராடை எனப்பட்டது. ஆடைகளில் ஓரப்பகுதியில் கரை வைத்தும் நெய்யப்பட்டது. கரை பூ வேலைப்பாட்டுடன் காணப்பட்டதை,

பூங்கரை நிலம் படைத்தாழ மெய்யசை (கலி:116)

என்னும் வரி புலப்படுகிறது. பூ வேலைப்பாட்டுடன் நீல நிற வண்ணம் தோய்ந்த ஆடையை முல்லை நில மங்கை. நிலம் தோய உடுத்தி இருந்ததினை,

நிலந்தாழ்ந்த
பூங்கரை நிலம் தம்இத் தளர் பொல்கி (கலி:115)

என்னும் வரியால் அறிய முடிகிறது. ஆடைகள் வண்ணம் தேய்க்கப்பட்டு பூ வேலைப்பாடு அமைத்து கலை நயத்துடன் நெய்தனர்.

**கொல்லர்**

சங்க காலத்தில் இரும்புத் தொழில் செய்யும் கொல்லர் இருந்தனர். அவர் தொழில் செய்யும் இடம் உலைக்களம் எனப்பட்டது. பயிர் தொழிலுக்கு வேண்டிய கருவிகளையும் படை

வீரர்களுக்குத் தேவையான படைக் கருவிகளையும் செய்ததால் கொல்லர் முக்கிய இடத்தினைப் பெற்றிருந்தனர். கொல்லர்கள் ஊர்தோறும் உழவர் முதலியோர்க்கு வேண்டிய கருவிகளை அவ்வப்போது செய்து கொடுத்து ஆண்டு முடிவில் ஊதியம் பெறும் வழக்கமும் அவர்கள் ஊரவர்க்குப் பொதுத் தொழில் செய்வோர் ஆகிய வழக்கமும் இன்றும் காணப்படுகின்றன. ஏழூர்க்குத் தொழில் பொதுவிற்க வேண்டிய கொல்லுலையில் துருத்து இடையுறாது இரவு பகல் இயங்கியது. போர்க்காலங்களில் கொல்லர் வீரர்க்குரிய கருவிகளைச் செய்து கொடுத்ததினை,

**படைபண்ணிப் பனையவும் பாமாண்ட் (கலி:19)**

என்னும் வரி குறிப்பிடுகிறது.

## பொற்கொல்லர்

பொன்னால் அணிகலன் செய்பவர் பொற்கொல்லர் எனப்படுவர். சிலம்பு, கிண்ணி, வளை, மேகலை, மோதிரம், குழை, ஆரம் போன்ற அணிகலன்கள் கலை நயத்துடன் செய்யப்பட்டன. அணிகலனின் பகுதிகள் தனித்தனியாக செய்யப்பட்டு பின் பொடியசதிப் பற்ற வைப்பர். பற்ற வைத்த இடம் நிறத்தில் மாறுபடும் நிறமாறுபாட்டை போக்க அணிகலனை ஒரே நிறமுடையதாக்க பொற்கொல்லர் ஊது உலையில் வைத்து எடுத்து நீர் ஊற்றி ஒரே நிறமுடையதாய் பிரகாசிக்கச் செய்வர். இவ்வாறு பொடி ஊதி வேலை செய்த திறத்தினை,

**காலவைக் கருபொன் வளைஇய வீரமை சுற்றொடு**
**பொடியடிற் புறந்தந்த செய்வுறி கிண்கிணி (கலி:85)**

என்றும் வரிகள் புலப்படுத்துகின்றன. பொன்னை நெருப்பினில் உருக்கி அதனுள் மண்வைத்து கலை நயத்துடன் அணிகலன்கள் செய்தனர் என்பதை,

**மான உருக்கிய நன்பொன்மணியுறீ (கலி:117)**

இவ்வரியால் தெரிகிறது.

## முடிவுரை

சங்க இலக்கியத்தில் முல்லை நிலத்தில் ஆயர்களுக்கு ஆடு மாடு மேய்த்தல் மட்டும் தொழிலாக இருந்திருக்க வாய்ப்பில்லை. அவர்கள் ஆடு மாடுகளுக்குத் தேவையான தாவர உணவுகளை முதலில் காட்டில் விளைவித்து உற்பத்தி செய்து இருக்கலாம். அப்போது பக்கத்து நிலத்தில் பயிர்கள் விளைந்ததைப் பார்த்திருக்க வேண்டும். எனவே அம்மக்கள் காட்டைத் தடுத்து உழுது வரகு விதைத்து அதில் வந்ததை உணவாகக் கொண்டிருந்தனர் என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்"

என்ற பாரதியாரின் வரிகளுக்கு இணங்க, நம் எண்ணங்களை பிறருக்கு தெரிவிக்கவும் பிறருடைய உணர்வுகளை நாம் புரிந்து கொள்ளவும் உதவுவதுதான் மொழி. உலகில் பல மொழிகள் இருந்தாலும் அவை தமிழுக்கு நிகராக முடியாது. சங்கம் வைத்து தமிழ் வளர்த்த சங்க காலம் முதல் இன்று வரை தமிழ் நீண்ட, நெடிய வளர்ச்சியை கொண்டிருக்கிறது. அதனால்தான் தமிழ் மொழி செம்மொழி என்ற பெருமையைப் பெற்று காலத்தால் என்றென்றும் அழியாத செழுமை வாய்ந்த மொழியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

தமிழிலக்கியங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு குறிக்கோளை மக்களிடையே விதைத்து பண்பட்ட மனிதர்களாய் வாழ வழி வகுக்கிறது. இத்தகைய வளமை பொருந்திய தமிழ் மொழிக்கு இன்னும் இதுபோன்ற பல ஆய்வுகளைச் செய்து தமிழன்னைக்கு சிறப்பு செய்வோம். அதனடிப்படையில் நமது தாகூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை சுழற்சி - இரண்டின் சார்பாக சங்க இலக்கியத்தில் முல்லைப்பாட்டு எனும் தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

முனைவர் இரா. சாந்தி
முதல்வர்
தாகூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
குரோம்பேட்டை, சென்னை 44.

நெய்தல் பதிப்பகம்
நெ. 5. தங்கவேலு தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005.

ISBN 9789390687220